**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 77/2025**
**U/s. 296(b),118(1),351(3) of IPC**
**PROSECUTION WITNESS NO. 1 (LW.1 )**

| | | |
|---|---|---|
| **Name** | : சுந்தர் | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. நித்யா, பெஞ்ச் கிளார்க் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No.77/2025 5.11.2025 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.06 FN**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் ரெட்டிபாளையம் மேலவெளி வேதவள்ளி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் ஆவணம் எழுத்துவரிடம் உதவியாளாராக பணி புரிந்து வருகிறேன் . ஆஜர் எதிரி டீக்கடையில் நின்று கொண்டிருந்தபோது எனக்கு தெரியும் . தேதி ஞாபகமில்லை. ஆகஸ்ட் மாதம் 2024 ம் வருடம் மாலை சுமார் 6.30 மணியளவில் நானும் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் தெற்குவீதியில் உள்ள தங்கசாராதா மருத்துவமனை அருகில் டீக்கடைக்கு டீ குடிக்க சென்றுஇருந்தோம். அப்போது அங்கிருந்த சத்தியமூர்த்தி என்பவர் மது அருந்தி தரக்குறைவான அருவருக்க தக்க வார்த்தையால் திட்டியபோது ஏன் இப்படி பேசிகீறிர்கள் என்று நானும் எனது நண்பருமான 82 வயதுள்ள கிருஷ்ணமூர்த்தியும் கேட்டபோது வளாகத்தில் உரிமையாளருமான ஆஜர் எதிரி அவரது கடையில் இருந்த கண்ணாடி தேநீர் குவளையை எடுத்து எனது முன்பக்க தலையில் அடித்துவிட்டார். மீண்டும் 3 –4 கண்ணாடி தேநீர் குவளையை எடுத்து என்னை அடித்தார். எல்லோரும் சம்பவத்தை குறித்து வேடிக்கை பார்த்ததார்கள். நான் தற்காத்து கொள்ள அவரை திருப்பி தாக்கினேன். தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமனையில் கிருஷ்ணமூர்த்தி உடன் சிகிச்சையில் சேர்ந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1.** நான் எனது முதல் விசாரணையில்  சொல்லி உள்ள சத்தியமூர்த்தி என்பவர் மது அருந்தி தரக்குறைவான அருவருக்க தக்க வார்த்தையால் திட்டியதாகவும்  ஏன் இப்படி பேசிகீறிர்கள்  என்று நானும் எனது நண்பருமான  82 வயதுள்ள கிருஷ்ணமூர்த்தியும்  கேட்டதாகவும், வளாகத்தில் உரிமையாளருமான ஆஜர் எதிரி அவரது கடையில் இருந்த கண்ணாடி தேநீர் குவளையை எடுத்து எனது முன்பக்க தலையில் அடித்துவிட்டாதாகவும் உள்ள சங்கதிகளை புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் சொல்லிஉள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கும் மேற்கு காவல்நிலையத்திற்கும் இடையில் உள்ள துாரம் சுமார் அரை கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரிதான். போலீசார் நான் காவல்நிலையம் செல்வதற்கு முன்பாக சம்பவயிடத்திற்கு வரவில்லை . மருத்துவகல்லுாரி மருத்துவமனைக்கும் சம்பவயிடத்திற்கும் இடையில் உள்ள துாரம் சுமார் 6  கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரிதான்.

2.நான் சம்பவயிடத்தில் இருந்து மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாக மேற்கு காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டுதான் சென்றேன். காவல்நிலையத்தில் இருந்த போலீசார் சம்பவம் பற்றி என்னிடம் கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை போலீசாரிடம் சொன்னேன் . நான் சொன்ன விவரத்தை போலீசார் எழுதி கொண்டார்கள்.  போலீசார் மருத்துவமனையில் சேர்ந்துவிட்டு புகார் கொடுக்குமாறு சொன்னார்கள் என்றால் சரிதான். அதனால் உடனடியாக மருத்துவமனைக்கு சென்று சேர்ந்தேன்.  போலீசார் நான் மருத்துவமனையில் சேர்ந்த ஒரு மணி நேரத்திற்கு உள்ளதாகவே  மருத்துவமனைக்கு வந்தார்கள் .அவ்வாறு மருத்துவமனைக்கு வந்த போலீசாரிடம் நான் நடந்த சம்பவம்பற்றி சொன்னேன். போலீசார் அதனை  எழுதி கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் மருத்துவமனைக்கு வந்த போது எனக்கு துணையாக எனது மனைவி இருந்தார் என்றால் சரிதான்.

3. நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கிருஷ்ணமூர்த்தி சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். அதன்பிறகு போலீசாரை மருத்துவமனையில் பார்க்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து விடுவிப்பு பெற்றபிறகு காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். என் மீது எதிரி கொடுத்த புகாரின் பேரில் மேற்கு காவல் நிலைய போலீசார் மேற்கு காவல்நிலைய குற்ற எண் 571/2024  ன் படி வழக்கு பதிவு செய்தார்கள் . அவ்வழக்கு நான் எதிரியை கத்தியினால் அவரது முகத்தில் கிழித்து காயப்படுத்தியதாக வழக்கு என்றால் சரிதான். அவ்வழக்கில் நான் முன்பிணை

பெற்று வந்தேன் . மேற்படி வழக்கில் 15 நாட்கள் காவல்நிலையத்தில நிபந்தணை கையொப்பம் செய்தேன்.

4. அவ்வாறு நிபந்தணை கையொப்பம் செய்த காலத்தில் போலீசார் நான் கொடுத்த வழக்கிற்காக என்னிடம் தேவையான கையொப்பங்களை பெற்று கொண்டார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரியை நான் தாக்கியது சம்மந்தமாக என்மீது பதியப்பட்ட குற்ற வழக்கில் இருந்து தப்பித்து கொள்வதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கேற்றாற் போல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பத்திர எழுத்தராக உள்ளேன். நான் சம்பவ காலத்திற்கு பிறகும் ஏற்கனவே வசித்து வந்த முகவரியில் வசித்து ஏற்கனவே அலுவலகம் வைத்து நடத்தி வந்த முகவரியில் அலுவலகம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**., L.L.M
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 77/2025**
**U/s. 296(b),118(1),351(3) of IPC**
**PROSECUTION WITNESS NO. 2 (LW.2 )**

| | | |
|---|---|---|
| **Name** | : கிருஷ்ணமூர்த்தி | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. நித்யா, பெஞ்ச் கிளார்க் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No.77/2025 5.11.2025 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.20 FN**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் வடக்குவீதியில் குடியிருந்து வருகிறேன். நான் முதல் நிலை பள்ளியில் தலைமையாசிரியராக பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அசா1 சுந்தர் என்பவரை வளாகத்தின் உரிமையாளர் அடித்து விட்டதாக என்னிடம் சொன்னார். தற்போது வயது முதிர்வு காரணமாக எனக்கு சம்பவம் குறித்து நினைவில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு தற்போது நினைவில் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அசா1 சுந்தர் எனக்கு பழக்கப்பட்டவர் என்றால் சரிதான். அசா1 சுந்தர் எனக்கு பழக்கப்பட்டவர் என்பதால் முதல் விசாரணையில் அவருக்கு ஆதரவாக போலீசார் சொல்லி கொடுத்தற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 சுந்தர் என்னிடம் எந்த தகவலும் முதல் விசாரணையில் சொல்லி உள்ளவாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**., L.L.M
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.